**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**

**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**

**மோ.வா.வி.கோ.மனு எண். 161/2017**

பெயர் - திரு.உதயகுமார் ம.சா.2

த/பெ -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

ஜாதி -

மதம் -

வயது -

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03-ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை :-**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரபபு சாட்சி. எனது சாட்சியத்தை நிரூபண உறுதி கூற்றாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்து நடந்த இடம் திருநெல்வேலி - நாகர்கோவில் நான்கு வழிச்சாலை என்றால் சரிதான். இறந்து போன ரவீந்திரன் எனக்கு சகளை உறவு. அன்றைய தினம் சுடைலையாண்டவர் கோவில் திருவிழா நடந்தது அந்த கோவில் விழாவை பார்க்க தான் நாங்கள் போனோம். எங்கள் வீட்டில சாப்பிட்டு விட்டு எல்லாரும் கோவிலுக்கு போனோம் திரும்பி வந்துவிட்டு அவர்களை பஸ் ஏற்றிவிடுவதற்காக நான் போனேன். நாங்கள் ரோட்டைக்கடந்து சென்ற போது விபத்து என்றால் விபத்து என்றால் சரிதான் ரவீந்திரன் ரோட்டைக்கடந்து கொண்டிருக்கும் போது விபத்துநடந்தது என்றால் சரிதான். அன்றைய தினம் ரவீந்திரன் மது அருந்திருந்தார் என்றால்சரியல்ல. அவரது பிரேத பரிசோதனை

அறிக்கையில் அவர் இறப்பதற்கு முன்புமது அருந்தியிருந்ததாக சொல்ப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது மது போதையில் ரோடடைக்கடந்து சென்றதால் தான் இந்த விபத்து நடந்தது என்றால் தவறு. விபததுக்கு இறந்து போன ரவீந்திரன் காரணம் என்றும் 1வது எதிர்மனுதார் கா'ர் ஓட்டுநர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குடிபோதையில் இருந்த போது இறந்து போனார் என்பதால் அவருக்கு 2வது எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்படடவரல்ல. என்றால்சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** - இல்லை